முனைவர் இரா. இராஜேஸ்வரன்

# நீதி வழுவாத செங்கோல்!

பண்டைய தமிழ் மன்னர்களின் ஆட்சியின்போது மன்னருக்கு உரிய அரசு சின்னமாக அவர் அமரும் சிம்மாசனம், தலையில் சூடும் கிரீடம் என்கிற மணிமகுடம், கையில் ஏந்தும் செங்கோல், அரசப் பரம்பரையின் வீர வாள் இவற்றைச் சொல்வதுண்டு. புதியதாக பதவி ஏற்கும் அரசருக்கு முடிசூடும் பட்டாபிஷேக தருணத்தில் மேற்படி அரச சின்னங்களைத் தந்து ஆசிர்வாதம் செய்வது வழக்கம்.

செங்கோல் என்பது நீதி, நேர்மை, சமத்துவம், தர்மம் போன்றவற்றை பிரதிபலிக்கும் சின்னம். தர்மநெறியில் நீதி தவறாது மன்னர் நாட்டை ஆட்சி புரிந்தால் அந்த நாட்டில் வாழும் குடிமக்கள் எந்தவித குறையும் இன்றி மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். இதைத்தான் 'ராம ராஜ்ஜியம்' எனப் பெருமையாகச் சொல்வதுண்டு.

அன்றைக்கு பாரத பிரதமராகப் பொறுப்பேற்ற பண்டித நேருவிடம் வழங்கப்பட்ட செங்கோலின் மேல்பகுதியில் நந்திதேவரின் திருவுருவம் (ரிஷபம்) பொறிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் வாகனமான நந்திதேவர் தர்மத்தின் பிரதிநிதி (தர்ம தேவதை) என்றே போற்றப்படுபவர். இந்த தர்மம் என்கிற சொல் அனைத்து மதத்தினருக்கும் பொதுவான சொல். கர்நாடக மாநிலம் பாகல்கோட் மாவட்டத்தில் மிகப் பழைமைவாய்ந்த (ஏறத்தாழ 8ஆம் நூற்றாண்டு) சிவன் கோயிலில் சிவபெருமானுக்கு அருகே 'நந்திச் செங்கோல்' இருப்பது போன்ற சிலை இன்றும் உள்ளது. நந்திதேவர் திருவுருவத்துடன் பொருந்திய செங்கோல் என்பது பழைமைவாய்ந்த கலாசார மரபுதான்.

தர்மத்தை நாம் காத்தால், தர்மம் நம்மை காக்கும் என்பதை 'தர்மோ ரக்ஷதி: ரக்ஷத' என முன்னோர்கள் சொல்வார்கள். ஒரு மன்னனின் அரச செங்கோல் என்பது நீதி வழுவாத ஆட்சிக்கு லட்சணமாக இருப்பதால் அந்த செங்கோலை (ஆணை) நோக்கியே குடிமக்கள் வாழ்வதைப் பற்றி திருவள்ளுவர்,

'வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி.' (542)

என தம் குறளில் கூறியுள்ளார். மன்னனின் சிறப்பான ஆட்சியால்தான் நாடும், மக்களும் உயர்வார்கள் என்பதை ஔவையார்,

'வரப்புயர நீர் உயரும்
நீர்உயர நெல் உயரும்
நெல்உயரக் குடி உயரும்
குடிஉயரக் கோல் உயரும்
கோல்உயரக் கோன் உயர்வான்'

எனப் பாடியுள்ளார்.

நாடாளும் மன்னனுக்கு மட்டும் செங்கோல் அணிகலன் அல்ல. இறைவனுக்கும் அது சொந்தம். இன்றைக்கும் புராதன கோயில்களிலும், மடாதிபதிகளும் தங்களுக்கு ஏற்ற சின்னத்துடன் செங்கோலைப் பயன்படுத்துவதுண்டு. அரங்கன் ஸ்ரீரங்கத்திலிருந்து தனது இருப்பிடமான வைகுண்டத்தை ரங்கராஜாவாக திறம்பட அரசாட்சி செய்கிறான் என்பதை 'நாச்சியார் கோவை'யில்

பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்
செங்கோல் உடைய திருவரங்கச் செல்வனார்
எங்கோல் வளையால் இடர் தீர்வராகாதே (106)

என ஸ்ரீ ஆண்டாள் பாடியுள்ளார்.

1947ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்ற சமயத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தின் அன்றைய மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்தி சுவாமிகள் (1937-1951) அருளாணையுடன் ஆதீனத்தின் கட்டளைத் தம்பிரான்





ஸ்ரீ குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், மாணிக்கம் ஓதுவார் உட்பட மடத்தின் முக்கியஸ்தர்கள் புதுடெல்லிக்குச் சென்று ஆட்சி மாற்றத்திற்கு அறிகுறியாக விளங்கும் நந்திதேவர் திருவுருவம் பொருந்திய செங்கோலை 'கோளறு பதிகம்' பாடி ஆசிர்வதித்து வழங்கினார்கள். அந்தச் சமயத்தில் பிரபல நாதஸ்வர வித்வான் டி.என். ராஜரத்தினம் பிள்ளை குழுவினர் மங்கள இசையை இசைத்தார்கள்.



75 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வரலாற்று சிறப்புமிக்க இச்சம்பவத்தை மீண்டும்நினைவுகூர்ந்துமறுபுனரமைக்கும் வகையில் புதுடெல்லியில் நவீன தொழில்நுட்பத்துடன் பாரதத்தின் பாரம்பரிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வண்ணம் ரூ.970 கோடி செலவில் பிரமாண்டமாகக் கட்டப்பட்ட நாடாளுமன்றத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் திருவிழா தமிழ்நாட்டிலிருந்து சென்ற திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், மதுரை ஆதீனம், வேளாக்குறிச்சி ஆதீனம், பேரூர் ஆதீனம் உட்பட சைவ ஆதீனங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் மே 28 ஆம் தேதி மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டு 1927ஆம் ஆண்டு திறக்கப்பட்ட பழையநாடாளுமன்றத்திற்கு மாற்றாக புதிய பொலிவுடன் கட்டடம் கட்டுவதற்காக கடந்த 2020 டிசம்பர் 10ஆம் தேதி கர்நாடக மாநில சிருங்கேரி சங்கர மடத்தின் வேத பண்டிதர்களைக் கொண்டு கால்கோள் விழாவுக்கான பூமிபூஜை வைதீக சடங்குகளுடன் நடைபெற்றது. கட்டடத் திறப்புவிழாவுக்கு முதல்நாளான சனிக்கிழமை அன்று திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் புதிய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் வைக்கப்பட வேண்டிய நம் கலாசார சின்னமான செங்கோலை ஆசிர்வதித்து பாரதப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கினார். தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் பிரதமருக்கு நினைவுப்பரிசை வழங்கும் சமயத்தில் திருநீற்றை நெற்றியில் பூசி ஆசி வழங்கினார். இச்சம்பவம் சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில்,

'திருமுகம் கருணை காட்டத் திருக்கையால் நீறுகாட்டிப்
பெருமுறை துதிக்கும் ஆற்றால் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ அங்கண் ஒழிந்து வெப்பு அகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான்.'

ஞானசம்பந்தர் புராணத்தில் வரும் இப்பாடலில், 'திருமுகம் கருணை காட்டத் திருக்கையால் நீறுகாட்டி' என்று சொல்லியிருப்பது அன்றைக்கு பாண்டிய நாட்டை ஆண்ட மன்னருக்கு திருஞானசம்பந்தர் திருநீறு பூசி ஆசிர்வாதம் செய்ததைப் போன்றே பொருத்தமாக அமைந்தது.

மறுநாள் காலை 28ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் சிருங்கேரி சங்கர மடத்தின் வேத பண்டிதர்கள் கணபதி ஹோமம், நவகிரக ஹோமம் உள்ளிட்ட ஹோமம் மற்றும் பூஜைகளைச் செய்தனர். அச்சமயத்தில் சிருங்கேரி மடத்தின் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்ரீ பாரதி தீர்த்த மகாசந்நிதானம், ஸ்ரீ விதுசேகர பாரதி சந்நிதானம் ஆகியோர் ஆசிர்வதித்து அனுப்பிய யந்திரம், காமதேனு விக்ரஹத்தை பக்தியுடன் பிரதமர் பெற்றுக்கொண்டார்.

யாக சாலைக்கு அருகே அலங்கரித்து வைக்கப்பட்ட செங்கோலை ஆதீன மடாதிபதிகள் புனித நீரைத் தெளித்து பூஜித்தனர். அவ்விடத்திற்கு வந்த பிரதமர் செங்கோலுக்கு மலர் தூவி வணங்கி மரியாதை செலுத்திவிட்டு ஆதீன மடாதிபதிகளின் முன்னிலையில் தேவாரப் பாடல்களை ஓத தரையில் விழுந்து வணங்கி செங்கோலை மீண்டும் பக்தியுடன் ஆதீன மடாதிபதிகளிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

பிரதமர் செங்கோலை ஏந்திய தருணத்தில் மனதிலும், முகத்திலும் ஒருவித பூரிப்புடன் இருந்ததைக் காணமுடிந்தது. ஆதீன மடாதிபதிகள் புடைசூழ நாடாளுமன்ற மைய மண்டபத்தில் சபாநாயகர் இருக்கைக்கு அருகே கண்ணாடிப் பெட்டகத்தில், நாடாளுமன்ற சபாநாயகர் ஓம்பிர்லா முன்னிலையில் வைத்து வணங்கினார். இத்தருணத்தில் நாதஸ்வர வித்வான்கள் 'வந்தே



மாதரம்' பாடலை இசைக்க, ஓதுவார்கள் தேவாரப் பாடல்களைப் பாட, 'தென்னாடுடைய சிவனே போற்றி; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி', 'வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா', 'பாரத்மாதாகி ஜெய்' போன்ற பக்தி கோஷங்கள் விண்ணைப் பிளந்தது. புதிய நாடாளுமன்றத்தில் முதன்முதலில் நம்முடைய செந்தமிழின் ஓசைதான் கம்பீரமாக ஒலித்தது. இதுபோன்ற நிகழ்வைத்தான் அன்று மகாகவி பாரதியார் 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்' எனக் கனவு கண்டாரோ? இதைத் தொடர்ந்து கிறிஸ்துவம், இஸ்லாம், சீக்கியம், பௌத்த மதத்தின் குருமார்களின் சர்வமத பிரார்த்தனை நடைபெற்றது.

'வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்'

ஆம்! இன்று சைவமும், தமிழும் உலகமெல்லாம் பரவுவதற்கு தேசத்தின் தலைநகரில் நடைபெற்ற இவ்விழாவே சாட்சி! ●

நிம்மதி! சந்தோஷம்! உற்சாகம்!

குமுதம் பக்தி ஸ்பெஷல்

வியாழன் விட்டு வியாழன் (Fortnightly) உங்கள் வீடு தேடி வர வேண்டுமா?

இன்றே சந்தாதாரர் ஆகுங்கள்!



| ஒரு வருட சந்தா (குமுதம் பக்தி ஸ்பெஷல் மட்டும்) | |
|---|---|
| தமிழ்நாடு, புதுச்சேரி | ₹ 665 |
| பிற மாநிலங்கள் | ₹ 800 |
| அயல்நாடு (விமான தபால்) | ₹ 3,750 / $60 |

Cheque / DD / MO / RTGS / NEFT / IMPS

KUMUDAM PUBLICATIONS PVT LTD

INDIAN BANK A/c.No.429887450

BRANCH: PURASAWALKAM

IFSC CODE: IDIB000P056

OUR POSTAL ADDRESS:

Kumudam Publications Pvt.Ltd.,
No.306 Purasawalkam High Road,
Chennai-600 010.

* cheques are subject to realisation
For Further info write to
subscriptions@kumudam.com (or)
Call: 044-45919107 / 9840909525 / 9840909508
Timing: Mon to Sat 9.30 am to 6 pm
SUNDAY HOLIDAY

KINDLY PROVIDE YOUR NAME, RESIDENTIAL ADDRESS WITH PINCODE, MOBILE NUMBER AND TRANSACTION REFERENCE NUMBER

சந்தா தொகை கிடைத்த இரு வாரங்களுக்குப் பிறகு புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்!